# தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின்

# வெற்றிடங்கள்

தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் வெற்றிடங்கள் நிலவுகின்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்குத் தேவையான தகைமைகளைக் கொண்ட வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பாதுகாப்பு காவலர் (ஆண்)/பூங்கா உதவியாளர்/ களஞ்சியலாளர்/ சாரதி உதவியாளர்/கள உதவியாளர் எனும் பதவிகளுக்காக (III தரம்) (PL- 01)**

**தேவையான தகைமைகள் - கல்வித் தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முறைகளுக்கு உட்பட்டு குறைந்த பட்சம் சிறப்புச் சித்திகள் இரண்டு (02) உடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

**தொழிற் தகைமைகள் -**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம், கட்டமைக்கப்பட்ட பரீட்சையொன்றில் துறை தொடர்பான பெற்றுக் கொண்டுள்ள தொழிற் தகைமைகளுக்கு மேலதிகமான தகைமையொன்றாகக் கருதப்படும்.

**வயது** - வயது 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

**ஏனையவை -**

(i) இலங்கைப் பிரஜையொருவராக இருக்க வேண்டும்.

(ii) சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) எல்லா அபேட்சகரும் நாட்டின் எந்தவொரு இடத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மனதளவில் ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம் -** சம்பள அளவுத்திட்டம் - III,II, மற்றும் I ஆம் தரங்களுக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - ரூ. 40,000-10X450-10X490-10X540-12X590 - ரூ. 61,880/-

(2027.01.01 இலிருந்து அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். அதுவரை இச்சுற்றறிக்கையின் உபஅட்டவணை III பிரகாரம் உத்தேசிக்கப்பட்ட சம்பளம் கணக்கிடப்படும்.)

**இணைத்துக் கொள்ளப்படும் முறை -** கட்டமைக்கப்பட்ட பரீட்சையொன்றின் மூலம்

**02. I ஆய்வக உதவியாளர்/டிராக்டர் செயற்பாட்டாளர்/இயந்திர செயற்பாட்டாளர் (பெக்கோ)/விலங்குப் பொறுப்பாளர்/விலங்குணவு சேகரிப்பாளர்/மீனின பொறுப்பாளர்/ தொழிலாளர்கள்/தச்சுத் தொழிலாளர்கள்/கட்டடத் தொழிலாளர்கள்/வர்ணம் பூசுபவர்கள்/ சங்கிலி வாள் செயற்பாட்டாளர்கள் /குழாய் பொருத்துனர்கள்/ யானைப் பொறுப்பாளர் தச்சர்கள் எனும் பதவிகளுக்கானது (III தரம்) (PL- 02)**

**தேவையான தகைமைகள் - கல்வித் தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முறைகளுக்கு உட்பட்டு குறைந்த பட்சம் சிறப்புச் சித்திகள் இரண்டு (02) உடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

**தொழிற் தகைமைகள் -**

உரிய பதவிக்கு உத்தேசிக்கப்பட்டவாறு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற்கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாம் மட்டத்தின் திறமையொன்றைப் பெற்றிருத்தல்

**வயது -** வயது 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

ஏனையவை -

(i) இலங்கைப் பிரஜையொருவராக இருக்க வேண்டும்.

(ii) சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) எல்லா அபேட்சகரும் நாட்டின் எந்தவொரு இடத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மனதளவில் ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் - சம்பள அளவுத்திட்டம் - III,II, மற்றும் I ஆம் தரங்களுக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - ரூ,800-10x490-10x540-10x590-12x630- ரூ. 65,560/-

(2027.01.01 இலிருந்து அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். அதுவரை இச்சுற்றறிக்கையின் உபஅட்டவணை III பிரகாரம் உத்தேசிக்கப்பட்ட சம்பளம் கணக்கிடப்படும்.)

**கல்வித் தகுதி -** யானை பராமரிப்பாளர் - 8-ஆம் வகுப்பு தேர்ச்சி

**இணைத்துக் கொள்ளப்படும் முறை -** நடைமுறை மற்றும் கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

**03. யானைப் பொறுப்பாளர்களுக்கு**

II. கல்வித் தகைமைகள் - 8 தரம் சித்தி

தொழிற் தகைமைகள் - நடைமுறைத் தேர்வொன்றின் மூலம்

பதவியின் தன்மை மற்றும் பணியின் கட்டமைப்பு ((PL- 01) ம் (PL- 02)

இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது, ஓய்வூதியம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு உட்பட வேண்டும்.

நீங்கள் விதவை/விதவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அரசின் மூலம் அடிக்கடி நிர்ணயிக்கின்ற முறைக்கு உங்களினால் அதற்கான உதவிப் பணத்தைச் செலுத்த முடியும்.

நியமனத்தை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து 03 ஆண்டுகளான தகுதிகாண் காலத்துக்கு உட்பட வேண்டும். இணைத்துக் கொள்ளும் நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு உத்தேசிக்கப்பட்டவாறு வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

2020.10.16 திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் உத்தேசிக்கப்பட்ட ஏனைய அரச மொழியின்/அரச மொழிகளின் நிபுணத்துவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல்முறை சட்ட திட்டங்களுக்கும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிமுறைகளுக்கும், அரசின் நிதிப் பிரமாணங்களுக்கும், அரசின் ஏனைய விதிமுறைகள்/ சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்களுக்கும் அவற்றுக்கு உரியதாக அடிக்கடி வெளியிடப்படுகின்ற சீர்திருத்தங்களுக்கும் உட்பட வேண்டும்.

04. விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

I. பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று

II. தேசிய அடையாளஅட்டை / செல்லுபடியான கடவுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று

III. கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் (க.பொ.த (சா.தர)/ க.பொ.த (உ.தர)

IV. கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் (DS 04 மாதிரிப்படிவம்)

V. டிராக்டர் செயற்பாட்டாளர்/இயந்திர செயற்பாட்டாளர் (பெக்கோ)/சாரதி உதவியாளர் எனும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர்கள் சாரதி அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்பி வைக்க வேண்டும்.

05. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவதோடு, அப்பரீட்சையில் சித்தியடைகின்ற விண்ணப்பதாரர்கள் உரிய தொழிற் பரிசோதனைக்காக அழைக்கப்படுவர். அறிவித்தலின் பிரகாரம் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. சகல விண்ணப்பதாரர்களும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுச் சட்ட-திட்டங்களின் பிரகாரம் செயற்படுவது கட்டாயமானது.

07. தவறான தகவல்களை வழங்குதல்

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதில் மிகவும் கவனமாகவும் சரியாகவும் தகவல்களை வழங்க வேண்டும். இந்த நேர்முகப் பரீட்சைக்குரிய விதிமுறைகளின் பிரகாரம் யாராவது அபேட்சகரொருவர் அதற்காக நிற்பதற்கு பொருத்தமற்றவர் என்றவாறு தென்பட்டிருந்தால், நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் அல்லது நேர்முகப் பரீட்சை நடைபெறும் போது அல்லது அதற்குப் பின்னர் அல்லது எனும் எந்தவொரு சந்தர்ப்பமாக இருந்தாலும் அவருடைய / அவளுடைய அபேட்சகத்தன்மை நிராகரிக்கப்பட முடியும்.

அபேட்சகரொருவரினால் வழங்கப்படுகின்ற தகவல்கள் பிற்பட்ட காலத்தில் தவறானவை எனத் தென்பட்டால் அவர் /அவளினால் வேண்டுமென்றே ஏதாவதொரு விடயமொன்றை மறைத்ததென வெளிப்படுத்தப்பட்டால் அவர் /அவளுக்கு மேலும் நியமனமொன்றை வழங்குவது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படாது என்பதோடு இப்பரீட்சையைக் காரணமாகக் கொண்டு வழங்கப்பட்டிருந்த நியமனமொன்றை இரத்து செய்வதற்கோ அல்லது அரச சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கோ உட்படுத்தப்படுவர்.

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துக்குரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் இணைத்து அனுப்பப்படுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் உங்களால் விண்ணப்பிக்கப்படுகின்ற பதவி குறிப்பிடப்பட வேண்டும். "உதா - விலங்குப் பொறுப்பாளர் III தரத்திற்கான விண்ணப்பம்" என்றவாறு குறிப்பிட்டு 2026.10.31 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்,**
**அநகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை**

நீங்கள் பல பதவிகளுக்காக விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் அந்தந்த பதவிகளுக்கு வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை தேசிய மிருகக்காட்சிசாலையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் www.nationalzoo.gov.lk ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். வெற்றிடங்கள் நிலவுகின்ற இடங்கள் இணையத்தளத்தில் காட்டப்பட்டுள்ளன.

இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான உரைகளில், ஏதாவதொரு இணக்கப்பாடொன்றோ அல்லது வேறுபாடொன்றோ ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழி உரை அமுல்படுத்தப்படும்.

08. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயமொன்று தொடர்பாகவோ இணைத்துக் கொள்ளப்படும் செயன்முறைகளினுள் ஏதாவதொரு சிக்கலான நிலைமையொன்று ஏற்பட்டாலோ அல்லது அது பற்றி நியமன அதிகாரியினால் எடுக்கப்படுகின்ற தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழுவினரை முகாமை செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் உத்தரவின் பிரகாரம்

**பணிப்பாளர் நாயகம் (பதில்)**
**தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்**